இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...

Excerpts from **OODAADI (MEDIUM), ISBN 981-04-6861-X**

OODAADI (MEDIUM), a full three-hour 'Blacklight Theatre' production was staged on Fri 19 and Sat 20 June 1992 in Tamil at the Guinness Theatre, The Substation, presented by Agni Kootthu (Theatre of Fire) in the Singapore Festival of Arts (Fringe) organized by the National Arts Council, Singapore. With funding support from the National Arts Council. Professor Ka Sivathamby, from Colombo, Sri Lanka was in the audience on the first day of the performance.

After the staging of OODAADI, due to the typical poison-letters sent to the powers-that-be by the Tamil monkeys from various organisations in Singapore, Elangovan was deprived of the first Young Artist Award 1993 (for bilingual Poetry) – cash award of SGD 10,000, and also the SHELL Centenary Scholarship – cash award of SGD 87,000 meant for overseas theatre studies, though both were confirmed, by the bureaucratic clowns in power. The Tamil public-moral-guarding pimps were then assured that the play will never be allowed to be re-staged in Singapore, meaning it was unofficially banned from July 1992.

But OODAADI, received the *Singapore Internationale Award* in 2003 from the Singapore International Foundation and was published bilingually in English and Tamil, and the book was launched in Chennai, Tamilnadu, in June 2003.

OODAADI, the book is still not made available to the public at the National Library and its branches in Singapore, but available for sale at three English outlets.

*Performed by*

*Drunk & Spirit*
Thetchinamurthy

*Government Exorcist Muniandy*
Mohan


*Spirits*
Amaravathi
Elamaran
Elangovan
Haridas
S.R.L.Jothy
C.Nathan
Vijayakumar


*Production & Stage Manager*
S Thenmoli

*Set, Costume, Concept and Production Design*
*Written & Directed by*
Elangovan

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...







இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



## யோனிப்பறை

(ஒரு பெண் பேய் கூந்தலை வாரிவிட்டுக்கொண்டு அழகு பார்த்துக் கொண்டிருக்கிறது. கோவில் பூசாரி அரக்கப்பரக்க ஓடி வருகிறான்.)

பூசாரி: அடியே கறுப்பி! கறுப்பி! கதவைச் சாத்துடி. கோயில் பூசாரி தேவடியாத் தெருவுக்கு வந்ததை யாராவது பார்த்தா ஆபத்துடீகறுப்பி.

பெண்: என்ன சாமி? அவசர அவசரமா ஓடி வர்றீங்க. ஐய்! சாமி! ஏன் கதவைச் சாத்துறீங்க. என்ன சாமி ஆச்சு?

பூசாரி: கறுப்பி! கதவைச் சாத்தச் சொன்னா அழகு பார்த்துக் கிட்டு நிக்குறியேடி. இது அடுக்குமா? பகவானே!

பெண்: பகவானா? அப்படி யாரும் வரலியே சாமி. ஐய்யா! சாமி! நீங்க வந்தது எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு சாமி.

பூசாரி: ஏன்டிம்மா குழந்தை. நீ புதுசா தளதளன்னு இருக்குறியோனோ அதுதான் கப்புன்னு நுழைஞ் சுட்டேன். கறுப்பி! நேக்கு உன்கிட்டே ரொம்ப நாளா ஒரு விஷயம் கேட்கணும்னு ஆசைடி.

பெண்: என்ன விஷயம் சாமி?

பூசாரி: நீ எப்படி இந்த தொழில்ல வந்து மாட்டிண்ட?

பேய்: அட போங்க சாமி

பூசாரி: போவுறதுக்கா இங்கே வந்தேன். என் செல்லம். சொல்லுடி கறுப்பி

பெண்: ஆமா சாமி! என் சோகக் கதையை நீங்களும் கேட்கணுமில்லே. அதுவும் நான் சொல்லணு மில்லே. அப்பதானே என் பாவி மனசு ஆறும். சாமி... நான் ஊருல, சேரியில நண்டு நத்தை பிடிச்சுகிட்டு விளையாடிகிட்டு இருந்தேனா. அப்போ ஒருநாளு திடீர்னு சிங்கப்பூருல இருந்து என் கெழட்டு தாய் மாமன் காத்தாண்டி வந்துட்டான்.

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



அவன் மொகறையைப் பார்த்தாலே வாந்திவரும். அவ்வளவு கறுப்பு சாமி. என்னைவிட கறுப்பு சாமி... அப்படி இருக்க... என் மூதி கெழட்டு முண்டம் இருக்கிறாளே.

பூசாரி: யாருடி அது குழந்தே. உன்னைவிட பேஷா இருப்பாளா?

பெண்: அடப் போங்கசாமி. என் ஆத்தாவைச் சொன்னேன். அவகிட்ட நெறைய நகையும் காசும் கொடுத்து மயக்கி, என் கெழட்டுமாமன் என்னைக் கண்ணாலம் கட்டிகிட்டு இங்கே இழுத்துகிட்டு வந்துட்டான்.

பூசாரி: கிழட்டுப் பயலால ஒரு சுகமும் கிடைக்காதுடி குழந்தே.

பேய்: அப்புறம் சாமி... நானும் என் கெழட்டு மாமனும் நாகப்பட்டினத்துலே கப்பல் ஏறி... பொகைப் படகுல ஏறி சிங்கப்பூருக்கு வந்தோம்.

பூசாரி: பொகைப்படகா? ஆஹா ரொம்ப பேஷா, இருந்திருக்குமே?

பெண்: ஐயோ சாமி! அந்தப் படகுல ஒரே வெங்காய நாத்தம். அப்புறம் என் மாமனும் நானும்... என்னவோ பூரான் மலையாமே... அங்கே மூனு நாளு தங்கி படாதபாடு பட்டோம் சாமி. நெறைய பெரிய பெரிய பூரான் இங்கிட்டும் அங்கிட்டுமா ஓடிக் கிட்டே இருந்ததுங்க. எங்களைச் சுத்தப்படுத்துறதா சொல்லி, எங்க மேல சுண்ணாம்பு தண்ணி அடிச் சாங்க. மூணு நாள அங்கேயே தங்கச் சொல்லிட் டாங்க.

பூசாரி: அடடே நீ பொறை மலையை சொல்லுறியா குழந்தே. வெள்ளைக்கார துரைமாருங்க வெளி நாட்டுல இருந்து வர்ற கூலி சனங்களை அந்தத் தீவுல தங்க வச்சு 'குவேரன்டீன்' பண்ணுன பிறகுதான் சிங்கப்பூருக்குள்ளே விடுவாங்க. எங்க மாதிரி

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



மேல்சாதி ஆட்களுக்கு அந்தப் பிரச்சனையே கிடையாது. ஆமான்டி கறுப்பி, திட்டு திட்டா கறுப்பா வந்த நீங்க எல்லாம், வெள்ளைக்காரன் புண்ணியத்துல, மூனு நாளைக்கு வெள்ளை வெளேர்னு ஷேமமா செவப்பா இருந்திருப்பேளே? செயின்ட் ஜான்ஸ் தீவுல வச்சு, கறுப்புக்கெல்லாம் சுண்ணாம்பு அடிச்சு, உங்களுக்கு புண்ணியஸ் நானம் பண்ணிருக்கான்டி. ஹா ஹா ஹா!

பெண்: அட போங்க சாமி. கிண்டல் பண்ணுறீங்க. ரொம்ப கஷ்டப்பட்டோம் சாமி. மூணு நாளும் நாங்களே சமைச்சு சாப்பிட்டோம். ஆனா சாமி... சுண்ணாம்பு அடிச்சதும் நல்லதுக்குதான். தலையில இருந்த பேனெல்லாம் செத்துப் போச்சு.

பூசாரி: (அவள்தலையை வருடியபடி) கேட்கவே வருத்தமா இருக்குடி.

பெண்: அப்புறம் சாமி... மூனு நாளு கழிச்சு சிங்கப்பூருல சிராங்கூன் ரோட்டுல வீடு பிடிச்சு என்னை அடைச்சி வச்சிருந்தான் கெழட்டு மாமன். (அழுகிறாள்.)

பூசாரி: அபிஷ்டு! ஏன்டி ஒப்பாரி வைக்குறே? உன்னை என்னமோ பண்ணிட்டேன்னு இங்க உள்ள சீன மாமா பயலுக என்னை சேர்த்து வைச்சு மொத்து மொத்துன்னு மொத்திடப்போறானுக. நிறுத்துடி.

பெண்: சரி சாமி. அப்புறம் தான் சாமி தெரிஞ்சது என் மாமனோட திருட்டுத்தனம். என் மாமனோட மொதலாளி தான் காசுகொடுத்து அவன்கிட்ட என்னை பொஞ்சாதியாக்கிட்டு வாடான்னு சொல்லி அனுப்புனானாம்.

பூசாரி: ஐயோ! அபச்சாரம்! அபச்சாரம்! பாவம்! பாவம்!

பெண்: ஐயோ தடவாதீங்க சாமி, கூசுது சாமி... அன்னைக்கு எதோ மொத ராத்திரியாம். நான் நல்லா தூங்கிக் கிட்டே இருந்தேன். என் மாமனோட மொதலாளி உள்ளே வந்து என்னைக் கட்டிப்பிடிச்சு நான் கதறக்

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



கதற என்னை கெடுத்துட்டான் சாமி. எனக்கு அவன் என்னா பண்ணுறான்னே தெரியலை சாமி. ஒரே வலி சாமி. நான் அப்ப வயசுக்கே வரலை வேண்டாம் வேண்டாம்னு கத்துனேன் சாமி. அவன் கேட்கவே இல்லை. அப்புறம் ஒவ்வொரு ராவும் வர ஆரம்பிச்சான். கெழட்டு மாமனும் கண்டுக்கவே இல்லை. அவன் தான் கூட்டிக்கொடுத்துட்டு காசு வாங்கிக்கிட்டானே.

பூசாரி: அடப் படுபாதகா, அவனுக்கு மோட்சமே கிடையாதுடி கறுப்பி.

பெண்: சாமி! பக்கத்து வீட்டுல ஒரு கறுப்பன் இருந்தான். நல்லா வாட்டசாட்டமா இருந்தான். ஒருநாளு கெழட்டு மாமன் வெளியே போயிருந்தப்போ கறுப்பன் என்னை அனாப்பிக்கிட்டு போயிட்டான். நான் அவனோட ஓடிப்போயிட்டேன் சாமி.

பூசாரி: ஓஹோ! அதுதான் அனாப்பிக்கிட்டு போயிட்டான்னு சொன்னியா? அடியே கறுப்பி! எனக்கு இந்தப் பறபாஷை புரியலைடி. மன்னிச்சுக்கோடி.

பெண்: சாமி, அந்த கறுப்பனும் என்னை சந்தோஷமா தான் வச்சிருந்தான். ஆனா அங்கே நெறைய கறுப்பு கறுப்பா கிள்ளங்கிக்காரனுங்க இருந்தாங்க.

பூசாரி: கிள்ளங்கிக்காரனுங்களா?

பெண்: நம்ம தமுளனுங்க சாமி. தெனமும் ஒவ்வொருத்தனா வந்து என்னை மேஞ்சிட்டானுங்க சாமி, அப்புறம் அந்த கறுப்பன், டானாக்காரனுக்கு பயந்துகிட்டு, என்னை இந்த மலாய் ஸ்ட்ரீட்டுல இந்த சந்துல, தேவடியா தெருவுல, சீன கொங்சி அடியாளுங்க கிட்ட வித்துட்டான் சாமி. கையாலாகதவன் நாசமாப் போவ.

பூசாரி: ரொம்ப வையாதேடி குழந்தே. அவன் உன்னை சீன மாமாக்கிட்ட விக்கலேன்னா நான் உன்னைப் பார்க்க முடியுமோ?

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



பெண்: சாமி! இந்தத் தெருவுல நான் தான் கறுப்பு. மத்த வளுங்க எல்லாம் செவப்பு. சீனாக்காரி, ஜப்பான் காரி, சட்டைக்காரி, ஜாவாக்காரி எல்லாம் ரொம்ப செவப்பா அசிங்கமா இருப்பாளுங்க சாமி. வெளிநாட்டுல இருந்து வெள்ளை வெள்ளையா வெள்ளைக்காரங்களும் கட்டை கட்டையா ஜப்பாங் காரங்களும் வந்தா கறுப்பி எங்கே கறுப்பி எங்கேன் னுதான் தேடுவாங்க சாமி, எனக்கு அவ்வளவு மவுசு சாமி. சொல்லுங்க சாமி. நான் ரொம்ப அழகா இருக்குறேனா சாமி?

பூசாரி: (சிரித்தவாறு) உண்மையிலேயே நீ ரொம்ப கவர்ச்சியா இருக்குறேடி கறுப்பி. கோயில்ல பூஜை புனஸ்காரம் பண்ணுறச்சே அம்மணமா நிக்குற அம்மனும் கறுப்புதான்டி கறுப்பி. நீ அம்மன் மாதிரியே கறுப்பா கொழு கொழுன்னு மினுமினுக்குறடி குழந்தே. அந்த வெள்ளைக்கார துரைங்களும் ஜப்பான்காரங்களும் உனக்கு நிறைய துட்டு கொடுப்பானுங்களோ இல்லியோ?

பெண்: ஆமாம் சாமி. ஆனா இந்த சீன கொங்சிப் பயலுக முக்கால்வாசி எடுத்துக்கிட்டு எனக்கு கொஞ்சம்தான் கொடுப்பானுங்க. இருந்தாலும் பரவாயில்லை சாமி. நான் சந்தோஷமா இருக்கிறேன். இங்கே அந்த நாத்தம் புடிச்ச கிள்ளங்கிக்காரனுங்க தொல்லையே இல்லை சாமி. இங்கே வர்ற ஒரே ஒரு தமுளரு நீங்கதான் சாமி. அதிலே எனக்கு ரொம்ப குஷியா இருக்கு சாமி. அதோடு எனக்கு எம்புட்டு பணம் தர்றீங்க சாமி.

பூசாரி: நோக்கு தெரியாதடி குழந்தே. அம்புட்டும் கோயில் பணம்டி. அம்புட்டும் உனக்குத்தான்டி கறுப்பி.

பெண்: போங்க சாமி. எனக்கு ஒரே வெட்கமா இருக்கு சாமி. எனக்கு ரொம்ப நாளா ஒரு சந்தேகம். கேட்கலாமா சாமி? சாமி. நீங்க மட்டும் ஏன் சாமி இவ்வளவு செவப்பா இருக்கீங்க? எவ்வளவு செவப்பு?

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



அம்மாடி! கிள்ளுனா ரோசாப்பூ மாதிரி செவந்து போவுது. சாமியோவ்! தினமும் பால்தானே குடிக்கிறீங்க? பால் ஊத்திதானே குளிக்குறீங்க?

பூசாரி: அசடு! அசடு! என் மூதாதையர் எல்லாம் மேல் லோகத்துல இருந்து அதாவது தேவலோகத்துல இருந்து வந்தவான்னு சொல்லுவா. இன்னும் சொல்லப்போனா சாமியோட நிழலே நாங்கதான்னு சொல்லுவா. சாமியோட நிழலைப் பார்க்க முடியுமோ? தெரியாதே. ஏன்னா அது மனுஷ நிழல் போல கறுப்பா இல்லாம சிவப்பா இருக்குமே.

பெண்: அடப்போங்க சாமி, நீங்க பொய் சொல்லுறீங்க.

பூசாரி: சரிடி கறுப்பி. உனக்கு மட்டும் ஒரு ரகசியத்தை சொல்றேன். காதைக்கொடுடி. ஏதாவது ஒரு சாமி ஒளிஞ்சு நின்னு ஒட்டுக்கேட்டுடப்போவுது. கறுப்பி, நாங்க எல்லாம் பிரம்மாவோட முகத்துல, அதுவும் வாயில இருந்து பிறந்தவான்னு சொல்லுவா.

பெண்: இல்லே பொய்யி... சாமி பொய்யி...

பூசாரி: என்னடி கறுப்பி! உனக்கு எப்படி புரியவைக்கிறது? சரி சரி... நாங்க எல்லாம் பிரம்மா இந்த பிரபஞ்சத்தைப் படைக்குறச்சே. பிரம்மா ஒன்னு விட்ட பிரணவக் குசுவுலே இருந்து பிறந்தவான்னு சொல்லுவா. புரிஞ்சுதோ?

பெண்: அப்படின்னா கறுப்பா பொறந்த நாங்க எல்லாம் யாரோட குசுவுல இருந்து பிறந்தோம் சாமி?

பூசாரி: சொன்னா கோவிச்சுக்கக் கூடாதுடி கறுப்பி. நீங்க எல்லாம் எமனோட எருமைமாடு விட்ட குசுவுல இருந்து பிறந்தீங்கன்னு சொல்லுவா.

பெண்: அடக் கருமமே. ச்சே! நாங்க எமனோட குசுவுலயாவது பொறந்திருக்கக்கூடாது? நான் உங்க சாதியில பொறக்க முடியாதா சாமி?

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



பூசாரி: அதுக்குதான் வந்திருக்கேன்டி கறுப்பி. நீ என்னோட ஒன்னுக்குள்ள ஒன்னா சங்கமிச்சின்னா போதும்டி. அடுத்த ஜென்மத்துல செவப்பா பாப்பாத்தியா பொறப்பேடி குழந்தே. போய்ப்பார்த்தா தெரியும் சிவப்பாத்தா யோனின்னு சொல்லுவா. நான் இன்னும் கறுப்பாத்தா யோனியையே பார்க்கலையேடி காட்டுடி.

பேய்: சாமி உங்களை எனக்கு ரொம்ப புடிச்சிருக்கு. நான் இன்னும் வயசுக்கு வரலைன்னு தெரிஞ்சும் நீங்க என்னை ஒன்னுமே செய்யலை. அடிக்கடி வர்றீங்க. சும்மா தொட்டுப் பார்த்துட்டு மட்டும் போயிடுறீங்க, என் மேல ரொம்ப ஆசையா சாமி?

பூசாரி: அடியே கறுப்பி, நன்னா புரிஞ்சுகிட்டியோ இல்லியோ? இன்னிக்கு நான் நாள் நட்சத்திரம் எல்லாம் பார்த்து வந்திருக்கேன்டி, உன்னை ஒரு கை பார்க்கப் போறேன்டி கறுப்பி.

பெண்: ஆங்! சாமி! நான் கறுப்பு. நீங்க செவப்பு. நீங்க ஆசாரம் உள்ளவங்க. என்னை தொட்டா தோஷம் இல்லையா சாமி? நான் தேவடியா சாமி.

பூசாரி: ஏய் கறுப்பி! அபச்சாரம் அபச்சாரம், அப்படி சொல்லாதேடி. எங்க மூதாதையர்ல இரண்டு பேரு பிரம்மாவுக்கும் தேவதாசிக்கும் பிறந்தவங்களாம். அப்படி பார்க்குறச்சே நாங்க எல்லாம் ஒருவகையுல தேவடியாமவனுங்கதான்டி கறுப்பி? கறுப்பி! நீ கறுப்பு. நான் சிவப்பு, கண்ணை மூடுனாச்சே கறுப்பு. கண்ணைத் திறந்தாச்சே வெளுப்பு. ஒன்னுக்குள்ள ஒன்னா உரசின்டா நெருப்பு. வாடி கறுப்பி, ஒரு துரைசானி கோயிலுக்கு வந்தா, விலை உயர்ந்த சப்பாத்தை மறந்து விட்டுட்டுப் போயிட்டா. துரைசானி சப்பாத்தை உனக்காகக் கொண்டாந்திருக்கேன்டி கறுப்பி, போட்டுக்கடி கள்ளி! கறுப்பு துரைசானி, கண்ணே பட்டுடும் போலிருக்குடி.

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



பெண்: இருந்தாலும் சாமி... நீங்க எல்லாம் சாமிக்கு சமம். என்னைத்தொட்டா உங்களுக்கு மோட்சம் கிடைக்காதே சாமி. அப்புறம் சொர்க்கத்துக்கே போவமுடியாதே. நான் பறச்சி சாமி, தோஷம்.

பூசாரி: அசடு அசடு. தோஷம்தான்டி. ஆனா சந்தோஷம். பகவத் கீதையிலே பகவான் என்ன சொல்றார் தெரியுமோ நோக்கு? அர்ச்சுனனைப் பார்த்து ஏ அர்ச்சுனா அம்பைப் போடுடான்னு சொல்றார். யோகங்களிலேயே கர்மயோகம் தான் சிறந்த யோகம்னு சொல்றார். இராஜயோகம் ஞானயோகம், பக்தியோகம் எல்லாம் பண்ணுறதுக்கா நாம மனுஷ உடம்போட இருக்குறோம். அதெல்லாம் சுக்கிலமும் சுரதமும் வத்திப்போன பிறகுடி கறுப்பி, வாடி கறுப்பி, நான் இப்போ அம்பு போட வந்திருக்கேன்டி. கறுப்பி, ஊர்ல உள்ள பாப்பாத்தியை என் மனசுல ஏத்திண்டு சூடேறிப் போயி வந்திருக்கேன்டி கறுப்பி. அம்புபோட வந்திருக்கேன்டி. கர்மயோகம் பண்ணலாம் வாடி கறுப்பி, என்னைக் கட்டிப் பிடிச்சுக்கடி கறுப்பி.

பெண்: அடி ஆத்தாடி! சாமி, நீங்க கர்மயோகம் பண்ணுனா நான் என்ன யோகம் சாமி பண்ணுறது? அம்மணமா வேற உட்காரவச்சிட்டீங்க.

பூசாரி: நீயா? காமயோகம்டி கண்ணு. வெளுத்துக்கட்டுடி. இப்படி உக்காருடி குழந்தே. சுக்லாம் பரதரம் விஷ்னும், ஷசிவர்ணம் சதுர்ப்புஜம். பிரசன்ன வதனம் தியாயே. சர்வ விக்நோப ஷாந்தயே: மமோ பாப்த ஸமஸ்த. துரித க்ஷய துவார: ஸ்ரீபரமேஸ்வர ப்ரியாத்தம் ஸ்ரீமகாயோனி பூஜாம் கரிஷ்யே. புஷ்பம் சமர்ப்பயாமி...

பெண்: சாமி! என்ன முணுமுணுக்குறீங்க. எனக்கு ஒன்னுமே புரியலை.

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



பூசாரி: அதுதான்டி மந்திரம். இது உன் கால்விரலுக்கு. இது உன் காலுக்கு. இது உன் கூந்தலுக்கு. இது உன் கண்ணுக்கு. இது உன் மூக்குக்கு. இது உன் இச்சு கொடுக்குற உதட்டுக்கு. இது உன் கழுத்துக்கு. இது உன்... பகவானே... மோட்சம் தெரியுதே... இது உன் கோபுர முலைக்கு. இது இராஜகோபுர முலைக்கு. இது உன் நாபிக் கமலத்துக்கு. இது... இது... நாராயணா நாராயணா... நல்லா காலை விரிச்சுகிட்டு உட்காருடி கறுப்பி. கிணி கிணி கிணி கிணி! உன் மன்மத பீடத்துக்குடி கறுப்பி, மணியடிக்கிறேன்டி கறுப்பி. நிதம்ப மணியை நினைச்சுகிட்டே என் சரீரமும் சாரீரமும் நடுநடுங்க மணியடிக்கிறேன்டி. அர்ச்சனையே ஏத்துக்கோடி தேவி. கிணி கிணி கிணி ணி... வாடி கறுப்பி! அர்த்தயாம பூசைக்கு வாடி. ஷோட ஸோபனமெல்லாம் செய்யுறேன் வாடி. (பூசாரி அவளைக் கட்டிப்படுத்து படுக்க வைக்கிறான். அவள் மேல் பரவுகிறான். திடீரென்று அலறுகிறான்.)

பெண்: சாமி. பார்த்து சாமி. வலிக்குது சாமி.

பூசாரி: ஆ! ஐயோ! ரத்தம்! ரத்தம்! ரத்தம், தீட்டு! தீட்டு!

பெண்: அய்யய்யோ சாமி, மன்னிச்சுடுங்க சாமி. நான் வயசுக்கு வந்துட்டேன் சாமி. எந்திரிங்க சாமி. ஆ! சாமி என்ன பேச்சு மூச்சு இல்லாம கிடக்குறாரு சாமி. சாமி! சாமி! என்ன ஆச்சு சாமி. ஐயோ ஐயரு பட்டுன்னு போயிட்டாரே. நான் என்ன செய்வேன். எனக்கு பிரம்ம ஹத்தி தோஷமோ என்னவோ பிடிச்சுடுமே. ஏழு பிறப்பிலயும் எனக்கு மோட்சமே கிடைக்காதே. ஐயோ! நான் செவப்பா பாப்பாத்தியா பொறக்கவே முடியாதா? ஐயோ சாமி! சாமி! மோசம் பண்ணிட்டீங்களே சாமி, என்னை ஏமாத்திட்டீங்களே சாமி.

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



## இரயில்வே

கூலி: ஊ...ஊ...ஊ... ஜிகு ஜிகு ஜிகு ஜிகு.... ஊ...ஊ!

முனி: டேய் யாருடா அது ரயிலு விடுறது?

கூலி: சாமி! நான் தாங்க சாமி! சும்மா பொழுது போவலையேன்னு ரயிலு விட்டேன் சாமி. ரயில்வே தண்டவாளம் சும்மா தானே கிடக்குது சாமி.

முனி: இங்கே என்னடா செய்யிறீங்க?

கூலி: கூலிக்குக் காத்துகிட்டு இருக்குறோம் சாமி. கொஞ்ச நேரத்துல ரயிலு வரும் சாமி.

முனி: கூலிக்கா? அதுக்கும் இந்த ரயில்வே தண்டவாளத்துக்கும் என்னடா சம்பந்தம்?

கூலி: இந்த தண்டவாளத்துலதான் நம்ம கறுப்பு துரை வருவாருங்க சாமி. அவரு வர்ற வண்டிக்காக காலையில இருந்து காத்துகிட்டு இருக்கோம் சாமி. துரை வண்டியில வந்து நிப்பாருங்க. நாங்க எல்லாம் கையைக் கட்டிகிட்டு, குனிஞ்சுகிட்டே தண்டவாளத்துல இறங்கி நிப்போமுங்க சாமி. துரை எங்களை ஒவ்வொருத்தரா கூப்பிட்டு சிகரெட்டு டின்னுக்குள்ளே மாசக்கூலி அஞ்சு வெள்ளி எழுபத்து மூணு காசை, மாசத்துக்கு இரண்டு தடவை வந்து பிரிச்சுப்போட்டுக் கொடுத்துட்டுப் போவாருங்க. அதோ! ரயிலு வருதுங்க. ரயிலு வருதுங்க சாமி. டேய் வாங்கடா டேய்! கறுப்புத் துரை வந்துகிட்டே இருக்கிறாரு. டேய் வாங்கடா! ஊ...ஊ...ஊ... ஜிகு ஜிகு ஜிகு...! உஷ்... கும்புடுறங்க எசமான். டேய் கறுப்புத் துரைக்கு சலூட் வைங்கடா!

கறுப்புத்துரை: இம், வரிசையா நில்லுங்கடா. பறப்பொடியன்களா! என் கையைத் தொடாம டின்னை வாங்குடா நாயே. வரிசையா நில்லுங்கடா கூலிக்கழுதைகளா, என்னாடா?

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



கூலி: துரை! ஒண்ணு கேக்கணும் துரை.

துரை: சீ! என் சுருட்டைக் கூட ஊம்பத் தகுதியில்லாத கூலிக்கார நாய்களா, என்னடா கேட்கப் போறே? கேளுடா! டேய் வாயைப் பொளந்துகிட்டு நிக்காம வரிசையா நில்லுங்கடா. நிழல்ல நின்னீங்கன்னா கூலி கொடுக்கமாட்டேன். மாசக் கடைசியிலதான் வந்து கொடுப்பேன். என் பூட்ஸ்சுக்குப் போடுற இங்கிலிஷ் போலிஷை விடக் கறுப்பா இருக்குற நீங்க, இந்த மண்டையப் பொளக்குற வெய்யில்ல நின்னாதான் உங்க ஒடம்புக்கு நல்லது. ஓம்! அப்பதான் ஸ்ட்ராங்கா வேலை செய்வீங்க, ஓம்! கருவாடு காய்ஞ்சாதான் ருசிக்கும்.

கூலி: துரை நீங்க சொல்றது ரொம்ப வாஸ்தவம் துரை. இந்த ரயிலு தண்டவாளம் மாதிரி எங்க உடம்பும் இரும்பா இருக்குங்க... ஆனா சாமி... நீங்க மட்டும் வெய்யில்ல நின்னாலும் கறுக்கவே மாட்டேங்குறீங்க, ஏன் சாமி?

துரை: வெள்ளைக்காரத் துரைங்களும் நாங்களும் ஒன்னுதாண்டா கழுதை. அவுங்க சீமையில பனி பெய்யிறதுனால... அவங்க ஒரேயடியா வெளுத்துப் போயிட்டானுங்க... எங்க யாழ்ப்பாணத்துல... பனியில்லன்னாலும்... நாங்க பொன் நிறமா சிவப்பா இருக்குறோம்னா அதுக்குக் காரணம்... அவுங்க விடுற மூச்சை நாங்க இழுத்து சுவாசிக்குறதுனாலதான்டா...

கூலி: டேய் பாருங்கடா... துரை தமாஷ் பண்ணுறாரு. ஒரே சந்தோஷமா இருக்கு... சீக்கிரம் கூலியை வாங்கிக்குங்கடா...

துரை: டேய்... கறுப்பா... என்னடா அந்த தேவடியாமவன் வரிசையில நிக்காம அந்த தண்டவாளத்துல இருந்துகொண்டு என்னையே முறைக்கிறான், என்ன ஆச்சு?

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



கூலி: துரை அவனை சொறிபுடிச்ச வெறிநாய் புடுங்கிடுச்சுங்க. ஒரு வாரமா ஒரு மாதிரியா இருக்கான். திடீர்னு ஊளையிடுறான். நாய்மாதிரி குரைக்கிறான்... அப்புறம் துரை... அப்புறம் துரை...

துரை: சட்டென்று சொல்லடா சனியனே...

கூலி: துரை... அவன் சாவுறதுக்குள்ள உங்ககிட்ட என்னமோ கேட்கணும்னு இராத்திரியெல்லாம் பினாத்திக்கிட்டு இருக்குறான் துரை... லைன்ல இருக்குற எங்களுக்கெல்லாம் தூக்கமே இல்லை துரை... விடிய விடிய தண்டவாளத்துல நின்னு குரைச்சிகிட்டே இருக்குறான் துரை... நாங்க எல்லாம் கிட்டப்போனா கடிக்க வர்றான் துரை... உங்ககிட்டதான் பயப்படுவான் துரை... என்னான்னு கேளுங்க துரை...

துரை: அடேய் பறநாயே... இங்கே வா... கம் Come here you pariah dog... come on... here...here...sit. sit...

கூலிநாய்: லொள்...! துரை உங்ககிட்ட நான் கொஞ்சம் பேசணும் லொள்... ஊ... எனக்கு கூலிவேணாம்.

துரை: கூலி வேணாமா... கதைக்கணுமா... ஆசை தீர கதைச்சுக்கடா நாயே!...

கூலிநாய்: ஆனாதுரை... நான் பேசி தீர்க்குறவரைக்கும்... இங்க யாரும் குறுக்கப்பேசக்கூடாது... லொள்... லொள்...

கூலி: துரை! வள்ளு வள்ளுனு விழுவுறான் துரை... அவனைக் கொஞ்சம் சொல்லவிடுங்க துரை...

கூலிநாய்: லொள்... டேய் கொட்டை தூக்குறப் பறப்பசங்களா... வக்காலத்தா வாங்குறீங்க... கொட்டை தூக்கி வாழுறதைவிட கட்டை தூக்கி வாழலாண்டா டேய்... துரை...! நாங்க கூலிங்கதான் துரை... ஊர்ல இருந்து கங்காணிங்களோட கூலிக்கு மாரடிக்க... தண்ணிக்கப்பல்ல அடைச்சுக்கொண்டு வந்து ரயில்வே லைன்போட சேர்க்கப்பட்டவங்க

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



துரை... எங்களை... ரயில்வே தண்டவாளம் ஓரமாவே கொண்டாந்து வச்சிங்க... எங்களுக்கு டவுனுப்பக்கமாவும் இல்லாம... ஆட்டுக் கொட்டாயியவிட மோசமான லேபர் லைன்ஸ்ல ஏழெட்டு குடும்பமாய் குடிவச்சீங்க... கக்கூசு கிடையாது. கரண்டு கிடையாது... பைப்புத்தண்ணி பீளி கிடையாது... கேணியை நாங்களே தோண்டிக்குவோம்! வாரத்துல ஆறு நாளும்... காலையில ஏழுல இருந்து மத்தியானம் மூனு வரைக்கும் வேலை... அரை மணிநேரம் மட்டுமே உக்காரக் கொடுக்குறீங்க... சீக்கிரம் எந்திரிக்கலன்னா... மண்டோர் உதைப்பான்... சீனனுக்கு மட்டும் இரண்டு பக்கம் பிடியுள்ள கூடை. எங்களுக்கு மட்டும் பிடியே இல்லாம தலையில தூக்கிகிட்டே நடக்க பெரிய கூடை... காலையில ஒன்றரை மைலுக்கு இந்தப்பக்கமா நடந்து... மறுபடியும் மூணு மைலுக்கு அந்தப் பக்கமா நடந்து... ரயில் தண்டவாளம் போட்டு ரிப்பேர் பண்ணி... தாகத்துக்கு... அங்கங்க... காட்டோரம் ஓடுற பாசாவுல தண்ணி குடிச்சு தலைவிதியை நொந்துகிட்டே நாங்க காலம் தள்ளுறம்... நீங்க எல்லாம் நாங்க வேகாத வெயிலுல போட்ட தண்டவாளத்துல... ரயிலு பெட்டியில... ஜோரா... சொகுசா போறீங்க... வர்றீங்க... எங்களை யாராவது நினைச்சுப் பார்த்தீங்களா... லொள்! மழைபெய்ஞ்சா கூட வேலை செய்யச்சொல்லி மண்டோர் அடிப்பான். எங்களுக்குப் பக்கத்துல கோயில்னு ஏதாவது இருக்கா... மரத்தடி முனியாண்டிக்கு சூலத்தை வச்சு கும்புடுறதைத் தவிர வேற வழி இருக்கா... மாசத்துல ஒரு நாளுதான் லீவு விடுறீங்க... அன்னைக்கு மட்டும்தான் நாங்க... ஆறேழு மைலுக்கு அப்பால் உள்ள பக்கத்து டவுனுக்கு போயி... சீனன் வங்சா கடையில வீட்டுக்கு அரிசி பருப்பு எல்லாம் வாங்கமுடியுது...

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



எப்பவாவது மாசத்துல ஒரு தடவை அந்த மலையாளத்தான் Dresser வந்துட்டுப் போவான். அதுவும் நாங்க வீட்டுல இல்லாத நேரத்துல... வந்து எங்க பொட்டச்சிங்கள தொட்டுப் பார்த்துட்டுப் போவான்... எங்களுக்காக துரைமாரெல்லாம் பெரிய மனசு வச்சு... பக்கத்து டவுனுல கள்ளுக்கடை தெறந்தீங்க... நாங்க குடிச்சே அழிஞ்சு போவ ஏற்பாடு பண்ணுனீங்க... மலேரியாக்கொசு கடிச்சு நிறையப்பேரு செத்துப்போனோம்... கொசுவலை வாங்கக்கூட காசு இல்லை... கூலியை யாருமே ஏத்தலை... தண்டவாளத்தையும்... இரண்டுபக்கமும் ஓடுற காட்டையும்... எங்க தூசிபடிஞ்ச 'லேபர் லைனை'யும் தவிர... எங்களுக்கு வாழ இன்னா இருக்கு... ஆனா... கிறிஸ்துவ பாதிரியெல்லாம் வந்து எங்களை மதம் மாத்துனா மட்டும்... உங்களுக்கெல்லாம் கோவம் பொத்துக்கிட்டு வருதா... துரை... இது நியாயமா...? துரையா?.. அடப்போடா பனங்கொட்டைகளா... ரயில்வேயையே உங்கொப்பன் வூட்டுச் சொத்தாக்கிக்கிட்டீங்கடா டேய்...நாங்க தண்டவாளம் போடலனா... நீங்க என்னடா கிழிப்பீங்க... வெள்ளைக்காரனை புடிச்சு ஊம்பிக்கிட்டா இருப்பீங்க...லொள்!

துரை: பறப்பயலே.. என்ன திமிர் உனக்கு... இவ்வளவு கதைக்கிறாய்...நாங்க எல்லாம் Ceylon steamship Steamerல காங்கேசன் துறையில ஏறி... Penang, Port Swettenham, Singapore வந்து இறங்குனோம். 23 ரூபாயில இருந்து 29 ரூபாய் வரை கொடுத்து சொகுசா வந்தோம்...உன் கூலிச்சாதி மாதிரி நாகப்பட்டணத்துல ஆர்டர் வாங்கிக்கிட்டு... கங்காணியோட வாலைப் பிடிச்சுகிட்டு... ஆடுமாடு மாதிரி அடைக்கப்பட்டு கூலிக்கப்பல் எறி வரலே. Penangக்கு முன்னால Pulau Jerajok-லயோ... சிங்கப்பூருக்கு முன்னால பூரான் மலையிலயோ

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



அதான் St. John's தீவுலயோ மூனுநாள் Quarantine-க்காகத் தங்கி... வெள்ளைக்காரன் ஒங்க உடம்பெல்லாம் சுண்ணாம்படிச்சு நாறிப்போயி வரல? நாங்க எப்பவுமே நேரடியா வந்து இறங்குனம். நாய்மகனே... நாங்களெல்லாம் படிச்சவங்க... Elementary School Leaving Examination... (ESLC) முடிச்சுட்டும்... Jaffna Seventh Standard முடிச்சுட்டும்.. British Junior Civil Serviceல நேரடியா கிராணியா சேர்ந்தவங்க... நீயெல்லாம் பஞ்சத்துல அடிபட்டு வந்த பறப்பசங்க... ஒப்பந்தக் கூலிக்கழுதைங்க... பார்க்கவே அருவருப்பா... கறுப்பா... மூஞ்சும் மொகறையும்... பன்னிமூக்கும்... சீச்சீ... First World War-ல வெள்ளைக்கார அரசாங்கத்துக்கு நாங்க, எல்லாம் நிதி சேர்த்து... ஒரு Fighter plane வாங்கி அதுக்கு 'Jaffna'-ன்னு பேருவச்சுக் கொடுத்தம்... நீங்க என்னடா கொடுத்தீங்க குரங்குகளா...? நீங்க உங்க கம்பைத் தூக்கிக் காட்டக்கூட லாயக்கில்லாத பறப்பசங்க... திமிராவா பேசுற... இல்லை! குரைக்குற... பறநாயே... கூலி வேண்டாம்னு குரைக்கிறாயா... உன் கூலியைக் கொண்டுபோய்... நாங்க பக்கத்து டவுனுல கட்டுற செண்பக விநாயகர் கோயில் நிதியில சேர்த்துக்குறன்... உன் பிச்சைக் காசு... கோவில் கக்கூஸ்ல ஒரு செங்கல்லுக்காவது பயன்படும்... அப்பதான்... இவ்வளவு நேரமும் உன் கதைப்பைக் காதால கேட்ட பாவம் தொலையும்.

கூலிநாய்: லொள் லொள்...! (விழுந்து கடித்துக் குதறுகிறான்.)

துரை: ஐயோ காப்பாத்துங்கடா பற நாய்களா... இவன் என்னைக் கடிக்கிறான். கொட்டையைக் கடிக்கிறான். கொட்டையைக் கடிக்கிறான்... ஆ!

கூலி: டேய்... பார்த்துக்கிட்டு நிக்காதீங்கடா... சொறி நாய் வெறியோட கடிச்சதுனாலப் பறையனுக்கு திடீர்னு வீரம் வந்துட்டுது... இந்த பறநாயைக் கல்லால

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



அடிச்சுக் கொல்லுங்கடா... அடி அடி... ஆ... என்னையும் கடிக்கிறான்... என் குரல்வளையைக் கடிக்கிறான். லொள் லொள்...

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



## குரா குரா

*(குறட்டை விட்டுத்தூங்குகிறான்.)*

கூலி: குரா... குரா... குரா... குரா... குரா...

ஜப்பானியன்: குரா குரா...!

கூலி: ஐயோ வயித்துல வேற மிதிக்குறான... ஐயோ மாஸ்தா...மாஸ்தா...

ஜப்பா: தத்ஸீ (நில்)!

கூலி: நிக்கச் சொல்றீங்களா மாஸ்தா... நிக்குறன் நிக்குறன்...

ஜப்பா: ஹனாசு (பேசு) ஹனாசு...!

கூலி: பேசச் சொல்றீங்களா மாஸ்தா... என்னாத்தைப் பேசுறது. விடியுற நேரத்துல... கழுத்துல கத்தியை வச்சுட்டானே... இன்னைக்குத் தலை போனது போனதுதான்... படுபாவி... கட்டைப்பய... இன்னைக்குக் கத்தியை வச்சு கழுத்தை வெட்டப்போறான்... சும்மாவா சொன்னாங்க... கள்ளனை நம்புனாலும் குள்ளனை நம்பாதன்னு.

ஜப்பா: ஹனாசு! ஹனாசு...!

கூலி: ஏண்டா பேசச் சொல்லி கத்தியை அழுத்துற... இஹ்ம்...இவன் கிட்ட இருந்து எப்படி தப்பிக்குறது... ஒரு சலாம்போட்டுடுவம்... மாஸ்தா...! ஓஹாயோ கொஸைமஸ் (காலை வணக்கம்...!

ஜப்பா: ஹாய்...! வாத்தாஷி மாஸ்தா (நான் ஐயா)!

கூலி: ஆ ஹாய்! மாஸ்தா... நீங்கதாங்க இங்க ஐயா...!

ஜப்பா: அனத்தா குறோ (நீ கறுப்பு)!

கூலி: ஹாய்! ஆமாங்க நான் கறுப்புங்க மாஸ்தா.

ஜப்பா: அனத்தா...இன்டோஜின் (நீ இந்தியன்!)

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



கூலி: ஹாய்! ஆமாங்க நான் இந்தியன்தானுங்க மாஸ்தா...

ஜப்பா: ஹாய்... அனத்தா இனு (நீ நாய்)!

கூலி: லொள் லொள்... ஹாய்... நான் நாய்தாங்க மாஸ்தா...

ஜப்பா: கமு...! (கடி) கமு!

கூலி: ஹாய்... கடிக்குறன் மாஸ்தா... எதைக் கடிக்குறது... என்னையே கடிச்சுக்குறேன் மாஸ்தா... சரி மாஸ்தாவோட பூட்ஸ் கடிக்குறேன்!

ஜப்பா: (சந்தோஷமடைகிறான்) அனத்தா குறோ... இன்டோஜின்... இனு... ஹாய்...!

கூலி: மாஸ்தாவைக் குஷிப்படுத்திட்டோம் போலிருக்கு...ஒரு ஜப்பான் குண்டைப்போட்டு மாஸ்தாவைக் கொஞ்சம் ஆடவைப்பமா... வாத்தாஷிவா இன்டோன் தெஸ் (நான் இந்தியன்).

ஜப்பா: ஹாய்...! சொனே வாகேவா (எத்தனை)?

கூலி: ஹாய்... வம்பாப்போச்சே... விரலைக்காட்டி எத்தனைன்னு எண்ணச்சொல்றானே...இச்சி(1)... நி(2) சான் (3)!

ஜப்பா: (சந்தோஷத்தோடு) ஹாய் ஹாய்...!

கூலி: மாஸ்தா...எனக்குக் கவிதை கூடத்தெரியும்
மாஸ்தா... ஒன்னு பாடுறன்...
அப்பன் சுப்பன் குப்பன்
எல்லாம் பைபை
நிப்பன் சியோனான்
ஹாய் ஹாய்

ஜப்பா: ஹாய்... நல்லாச் சொன்ன நாயே...!

கூலி: மாஸ்தா... தமிளு தெரியுமா? ஐய்யய்யோ என்னை மன்னிச்சுடுங்க மாஸ்தா... என்னென்னமோ உளறிட்டேன்...

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



ஜப்பா: அது உங்க சாமிங்க எப்படிச்சொல்லும் - பக்தா... யாம் உன்னை சோதித்தோம்... ஹாய்...

கூலி: ஐயோ... இவ்வளவு அழகா தமிளு பேசறீங்க மாஸ்தா... எப்படீங்க தெரியும்...?

ஜப்பா: மலாயாவைப் பிடிக்குறதுக்கு முன்னால... இங்க வாழுற மக்களோட மொழிகளைக் கத்துக்க... நாங்க முடிவெடுத்தோம். அதிலும் முக்கியமான Kempitai அதிகாரிங்கள மட்டுமே தேர்ந்தெடுத்தோம்.

கூலி: மாஸ்தா... நீங்க Kempitai Officer-ங்களா?

ஜப்பா: எனக்கு இந்தியாவைக் கொடுத்தாங்க... இந்தியாவுலேயே ரொம்ப இளிச்சவாயன் யாருன்னு பார்த்து... தமிழன்தான்னு தீர்மானிச்சோம்... தமிழைக் கத்துக்கிட்டேன்..... ஆமா... நீ இப்ப கவிதை பாடுனியே... உனக்கு என்னா வேலை... இப்படி இந்த செராங்கூன் ரோடு இரும்புப் பாலத்துல படுத்துத்தூங்குற...அதுவும் நான்பாட்டுக்கு போயிக்கிட்டு இருந்தப்போ... குரா குரான்னு என்னைக் கூப்பிட்ட...

கூலி: மாஸ்தா... நான் உங்களைக் கூப்பிடலீங்க... குரா குரான்னு, வா வான்னு குறட்டை விட்டுக்கிட்டிருந்தேனா... நீங்க நான்தான் கூப்புடுறேன்னு நெனைச்சுக்கிட்டீங்கப் போலிருக்கு... இனிமே இப்படி குறட்டைவிட மாட்டேன் மாஸ்தா.

ஜப்பா: டேய் நீ பறையன்தானே...?

கூலி: எப்படீங்க மாஸ்தா கண்டுபிடிச்சீங்க...?

ஜப்பா: கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாம... எதுக்கெடுத்தாலும்... இளிச்சுகிட்டு.. கூனிக்குறுகி வளவளன்னு பேசுறியே... அதைவச்சுத்தான் கண்டுபிடிச்சேன்... அதுவும் என்னோட பூட்ஸ் மாதிரி இருக்குற... பூட்ஸ வேற... நல்லா கடிச்சு...

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



இதோ பாரு... பூட்ஸ்ல உன் பல்லு நல்லா பதிஞ்சிருக்குது... வெள்ளைக்காரன், சீனன், மலாய்க்காரன்... அவனுங்களும் கடிச்சுப்பார்த்தானுங்க... ஆனா யாரு பல்லும் பூட்ஸ்ல இவ்வளவு அழகாப்பதியல... இந்த சோதனையிலயும் நீதான் ஜெயிச்சுட்டே. சொன்னா கடிக்குற ஜாதி நீதான்னு சுலபமா கண்டுபிடிச்சுட்டோம்.

கூலி: மாஸ்தா... என்னென்னமோ பெரிய வார்த்தையெல்லாம் பேசுறீங்க... நான் சும்மா... Dhoby Ghaut-ல இந்த வண்ணாரப்பசங்க காயப்போட்டிருக்குற வேட்டியையெல்லாம் உருவிவந்து... அதுல சிவப்புச்சூரியன் அடிச்சு... நிப்போன் கொடி வித்துப் பிழைக்குறேங்க...

ஜப்பா: எங்க நாட்டுக்கொடியை விக்குறியா...?

கூலி: ஹாய்..! நீங்க Johor-ல இருந்து நீந்திவர்ற ஒரு நாளுக்கு முன்பே உங்க நாட்டுக்கொடியை தயாரிச்சு விக்க ஆரம்பிச்சுட்டேங்க... எல்லாரும் Union Jack-ஐ இறக்கிட்டு ஜப்பான் கொடியைத் தாங்க ஏத்திவச்சாங்க மாஸ்தா... இங்க உள்ள தமிழு பத்திரிகைங்க கூட... உங்க வருகைக்கு ஆரத்தி எடுக்குற மாதிரி தலையங்கம் எல்லாம் போட்டு வரவேற்றாங்க மாஸ்தா. இன்னொரு முக்கியமான விஷயமுங்க. ஆர். ஆர்.வீரய்யான்னு ஒருத்தன் மாட்சிமை தங்கிய ஜப்பானியர் மலாயாவில் யுத்தம் புரிந்து ஜெயம் அடைந்த மாபெரும் ஜெயச்சிந்துங்குற கவிதை புஸ்தகம் போட்டானுங்க. கே.என். முத்துசுவாமின்னு இன்னொருத்தன் மாட்சிமை தங்கிய நிப்பானியர் மலாயாவில் யுத்தம் புரிந்து ஜெயம் அடைந்த வெற்றிமாலைன்னு கவிதை புஸ்தகம் போட்டானுங்க.

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



ஜப்பா: அந்த ரெண்டு பேரும் இப்ப எங்க... அவனுங்களையும் என் பூட்ஸ்-சை கடிக்கச் சொல்லனும்.

கூலி: அவ்வளவு பெரிய அறிவாளிங்கள நாங்க எல்லாம் சும்மா விடுவங்களா... அவங்களுக்கு உரிய கௌரவத்தைக் கொடுக்கவேணாம்? அவனுங்களை Alexandra கூத்துமேடைக்குக் கூத்துப்பார்க்க வரச்சொல்லி... கூத்துமுடிஞ்சு எல்லாரும் வெளியவரும் போது வாசல்ல நின்னு உங்க மாதிரி மாஸ்தாகிட்டே அடையாளம் காட்டி... Siamக்கு தண்டவாளம் போட அனுப்பிட்டேன். அங்க வேலை செய்யிற மத்த தமிழனுங்களோட களைப்பு தீர... இவனுங்க கவிதை பாடலாம்ல...? இவனுங்க கிறுக்குனதைக் கொஞ்சம் பாடிக்காட்டி ஜப்பான் கொடி விக்குறேனுங்க மாஸ்தா. வயித்துக்குதான் தீனி கிடைக்கல... ரொம்பக் கஷ்டமாயிருக்கு.

ஜப்பா: ஹாய்...! Indian National Army அல்லது Indian Independence League-ல சேர வேண்டியது தானே?

கூலி: நீங்க ஒன்னுங்க மாஸ்தா...! கரப்பான் பூச்சி மசுரு மாதிரி இருக்குற நம்ம பசங்களை நம்பி... நீங்க இவ்வளவு பணத்தைக் கொட்டுறீங்க... கடைசியில... எல்லாப் பயலும்.. காலைவாரிவிடப் போறானுங்க... இவனுங்க எல்லாம்... கொள்கையோ லட்சியமோ இல்லாத பசங்க... சுபாஷ் சந்திரபோஸ் இவனுங்களை நம்பி இந்தியாவைப் புடிச்சாப்புலதான். சோறு கண்ட இடமே சொர்க்கம்னும்... Siam காட்டுக்கு ரயில் தண்டவாளம் போட அனுப்பிடுவீங்கங்குற பயத்துலயும் INA-ல சேர்ந்தவனுங்க முக்கால்வாசிங்க மாஸ்தா... Jhansi Rani Regiment-ல உள்ள குட்டிகளை இவனுங்க அங்கங்க இழுத்துகிட்டு ஓடி.... வயித்துலயும் கையிலயுமா கொடுத்தது என்ன தெரியாதா...

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



ஜப்பா: ஹாய்! உன்னோட அரசியல் ஞானம் ரொம்பக் கூர்மையா இருக்கு... சீனப்பசங்க... எங்களுக்கு... ஐம்பது மில்லியன் சேர்த்துக் கொடுத்தானுங்க. இந்தியாக்காரனுங்க... உசுரைத்தான் கொடுக்கவந்தானுங்க... வெள்ளைக்காரன் போவுறப்ப சொன்னான். These Parlah dogs are the best slavesனு. அதனாலதான் Subash Chandra Bose கூட நாங்க ஒத்துழைச்சாலும்... உங்களை touch பண்ணமாட்டம்னு உறுதிமொழி கொடுத்தாலும்... ரகசியமா... உங்களைத்தான் புடிச்சு... Siamக்கு அனுப்புறம்... அங்க எந்தவிதத் தொல்லையும் கொடுக்காம நீங்க தான் ஒழுங்கா வேலை செய்யிறீங்கன்னு Kanchanapuriல இருந்து Report வந்திருக்கு.

கூலி: ஹாய்... எனக்கு ரொம்ப பெருமையா இருக்கு மாஸ்தா.

ஜப்பா: இந்த பனங்கொட்டைங்க என்னடான்னா... INA-ல சேராம Indian Independence League-ல மட்டும் தான் சேருவம்னு அடம்பிடிக்குறானுங்க. சுபாஷ் சந்திர போஸையே போடான்னு சொல்லிட்டானுங்க: அவனுங்க இந்தியாக்காரனுங்க இல்லையாம். அவனுங்க High Class Jaffnaவாம்... கூலித்தமிழனுங்க கூட துப்பாக்கி தூக்கிக்கிட்டு... INAவுல March பண்ண முடியாதுன்னுட்டானுங்க. IIL-ல சேர்ந்தா சண்டைக்குப் போகவேண்டியதில்லை... அதோட British Government Service Experience இருக்குறதுனால... எல்லா வேலையையும் அவனுங்களே நல்லா செய்யுறானுங்க. அதோட IIL-ல சேர்ந்தா... மலாயாவுக்கும் சிங்கப்பூருக்கும் சுலபமா போய்வர முடியும்... நாங்க கைது பண்ணவும் மாட்டோம்னு அவனுங்களுக்குத் தெரிஞ்சிருக்குது. சுபாஷ் சந்திர போஸ்கிட்ட They Claimed that their community being largely government servants, owed their services and

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



loyalty to whichever government was in power. பிறகு Ceylon காரனுங்ககிட்ட இருந்து Azad Hind Government க்கு நிதிசேர்த்துக் கொடுக்குறேன்னு ஒத்துக்கிட்டானுங்க. 75,000 Estate workers நாங்க Siam-க்கு அனுப்புனோம். அதுல 45,000 பேர் செத்துட்டானுங்க... 750 ரயில்வே Workers இந்தப் பனங்கொட்டைங்க தான் Choose பண்ணிக் கொடுத்தானுங்க. முக்கால்வாசி தொழிலாளிகளையும் எஸ்டேட் கிராணிங்களா இருந்த இந்தப் பனங்கொட்டைங்கதான் காட்டிக் கொடுத்தானுங்க... காட்டிக் கொடுக்குறதுல அவனுங்களும் சளைச்சவனுங்க இல்லை.

கூலி: ஹாய்... ஆனா மாஸ்தா என்ன இருந்தாலும் என் மாதிரி காட்டிக்கொடுக்கமுடியாதுங்க... முகத்தை மறைச்சுகிட்டு எத்தனை தடவை பல தமிழர்களை... பிரிட்டிஷ் உளவாளின்னு காட்டிக் கொடுத்திருக்கிறேன்... எத்தனை தடவை... Beach Road New Alhambara Theatre வாசல்ல... படம் முடிஞ்சு வெளிய வர்ற தமிழன்களைக் காட்டி... லாரியில ஏத்திவிட்டிருக்குறேன்... மாஸ்தா மரவள்ளிக் கிழங்கைத் தின்னுதின்னு... நாக்கே செத்துப்போச்சு... உங்க Kempitaiக்கு உளவு சொல்லச் சேர்த்துக்குங்க... மாஸ்தா... கொஞ்சம் அரிசியும்... சீனியும்... பாலும் கிடைக்குமுல்ல...?

ஜப்பா: எங்க பணமெல்லாம் INAக்கும், Cecil Street Indian Press-ல நாங்க நடத்துன தமிழ், இந்தி, இங்கிலீஷ் பத்திரிக்கைகளுக்கும் போவுது. பர்மா பார்டர்ல எங்களோட INAக்காரனுங்க வீரமா சண்டைபோடுறானுங்கன்னு நாங்க ஏமாத்திப்போடுற போட்டாவுக்கும் செய்திக்கும் போகுது.. இந்த தமிழன்கள நம்பவே முடியலை. Imphal-ல இப்ப நடக்குற சண்டையில துப்பாக்கி தூக்கக்கூட லாயக்கில்லாத நோஞ்சானுங்க துணியை அவுத்துப்போட்டுட்டு... வெள்ளைக்கார

இளங்கோவனின் 'ஊடாடி' நாடகத்திலிருந்து சில பகுதிகள்...



நாய்களோட கட்சிமாறி சேர்ந்துக்குறானுங்களாம். அதனால தமிழனோட... மூளை எப்படி வேலை செய்யுதுன்னு ஆராய்ச்சி பண்ணச்சொல்லி எனக்கு Order வந்திருக்கு... எங்களோட Chemical Warfare Experiment Laboratoryக்கு ஒரு பனங்கொட்டையும்... ஒரு தமிழனும் தேவை. ஒரே மொழி பேசுனாலும்... காட்டிக்கொடுக்குறதுல மட்டும் எப்படி வித்தியாசப்படுறானுங்கன்னு நாங்க கண்டுபிடிக்கணும்... உளவு சொல்றதுக்கு நிறைய பனங்கொட்டைகளும், மலையாளத்தானுங்களும், தெலுங்கன்களும், ஏற்கனவே இருக்குறானுங்க... இப்ப பொருத்தமான ஆளு நீதான்... வா! வா! குரா குரா...

கூலி: ஹாய் மாஸ்தா... எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு.... எனக்குப் பெரிய வேலையா போட்டுக்கொடுக்கப்போறீங்க...?

ஜப்பா: ஆமாம்! மூளையை வெட்டிப் பார்க்க எங்க விஞ்ஞானிங்க காத்துக்கிட்டிருக்காங்க...

கூலி: வெட்டிப்பார்க்கவா? ஐயோ... மாஸ்தா... ஐயோ... மாஸ்தா...!